SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் II பரீட்சை – ஜனவரி 2023

**(Level II Examination - January 2023)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (203) வியாபாரச் சட்டம் (BLA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் II பரீட்சை – ஜனவரி 2023

## (203) வியாபாரச் சட்டம்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

**பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**1.1** (2)

**1.2** (3)

**1.3** (2)

**1.4** (4)

**1.5** (2)

**1.6** (4)

***(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்,)***
***(12 புள்ளிகள்)***

**1.7** சரி

**1.8** சரி

**1.9** தவறு

***(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள்,)***
***(03 புள்ளிகள்)***

**1.10**

இணக்கப் பாதுகாப்பு என்பது, குற்றம் நிகழும் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வெளிப்படுத்தலொன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு கொடுக்கல் வாங்கலுக்கான (பரிவர்த்தணைக்கான) ஒப்புதல் வழங்கப்படுதலாகும்.

**1.11 Bill of Lading இன் முக்கியத்துவங்கள் (பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டிருந்தால் போதுமானது)**

1. கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களுக்கான ரசீதாகக் காணப்படுதல்
2. சரக்கு ஏற்றி இறக்குவதற்கான ஒப்பந்தம் இடம்பெற்றதற்கான ஆதாரமாகக் காணப்படுதல்
3. ஆவனத்திற்கான தலைப்பாகக் காணப்படுதல்

**1.12 காசோலையின் குறுக்கு கோடிடுதலின் வகைப்பாடு**

1. பொதுவான குறுக்கு கோடிடுதல்
2. விசேட குறுக்கு கோடிடுதல்

**1.13 பொருட்கள் விற்பனை சட்டம் / பொருட்கள் விற்பனை கட்டளை சட்டத்தின் கீழ் கொள்வனவாளருக்கு காணப்படும் நிவாரணங்கள் (பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டிருந்தால் போதுமானது)**

1. பொருட்களை வழங்காமைக்கு எதிரான நடவடிக்கை
2. குறித்த நிறைவேற்றம் (Specific Performance)
3. விலையை மீட்டெடுத்தல்
4. நிபந்தனைகளை மீறியமைக்காக பொருட்களை நிராகரித்தல்
5. உத்தரவாதங்களை மீறியமைக்காக நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்ளல்

**1.14 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படக்கூடிய கம்பனிகளின் வகைகள் (பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டிருந்தால் போதுமானது)**

1. வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
2. வரையறுக்கப்படாத கம்பனிகள்
3. உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்)*
*(10 புள்ளிகள்)*

*(25 புள்ளிகள்)*

***A பகுதி முடிவு***

SRI LANKA

## வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

***அத்தியாயம் 08 - காப்பீட்டு சட்டம், வாடகை கொள்முதல் மற்றும் குத்தகை (Law Of Insurance, Hire Purchase and leasing)***

**(அ) வாடகை கொள்வனவு ஒப்பந்ததின் வாடகை தரப்பினரான நிமாலுக்கு பின்வரும் கடமைகள் உள்ளன.**

- வாடகை கொள்முதல் ஒப்பந்தத்திற்கு இணங்க ஒப்புக்கொண்ட தவணை முறைப் பணத்தினை செலுத்த வேண்டிய கடமையிலிருந்து நிமால் விலகியுள்ளார்.
- பொருட்களை பாதுகாத்தல்

நிமாலின் கவனயீனத்தினால் விபத்து ஏற்பட்டிருக்குமாயின் நிமால் வாகனம் தொடர்பாக உரிய பாதுகாப்பினை மேற்கொள்ளவில்லை என அர்த்தமாகும்.

- பொருட்களின் இருப்பிடம் மற்றும் நிலையை உரிமையாளருக்கு தெரிவித்தல்

**ஸ்ரீ லக் என்டபிரைசஸ்** இன் முகவர்களுக்கு வாகனத்தை மீண்டும் நிறுத்தும் முயற்சி தொடர்பில் வாகனத்தின் இருப்பிடத்தை தெரிவிக்க வேண்டிய நிமாலுக்கு உண்டு.

- மோசடியான முறையில் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் பொருள் உரிமையாளரை ஏமாற்றவோ மோசடி செய்யவோ கூடாது.

விலை உயர்வினை பயன்படுத்தி வாகனத்தினை 3ஆம் நபர் ஒருவருக்கு மறு விற்பனை செய்ய முயற்சி செய்வதன் ஊடாக நிமால் தனது கடமையிலிருந்து விலகுகிறார்.

- பொருட்களின் பயனற்ற தன்மை காரணமாக ஏற்பட்ட சேதத்திற்கு உரிமையாளருக்கு இழப்பீட்டினை வழங்குதல்.

aat SRI LANKA

**வாடகை கொள்வனவு ஒப்பந்ததின் வாடகை தரப்பினரான நிமாலுக்கு பின்வரும் கடப்பாடுகள் ஏற்புடையதாகும்.**

- வாடகை கொள்வனவு ஒப்பந்தம் காலாவதியாகும் வரை காத்திருக்காமல் பொருட்களை கொள்வனவு செய்தல்.

  முழுத் தொகையினையும் செலுத்திய பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாகனத்தின் சொந்தத்தினை நிமால் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை தனதாக்கி கொள்வதுடன் அதன் பின்னர் வாகனத்தினை மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யலாம்.
- ஒப்பந்தத்தினை எந்நேரத்திலும் முடிவுறுத்தலாம்.
- வாடகைக் கொள்வனவாளர் ஒரே உரிமையாளருடன் ஒன்றுக்கு மேற்பட்ட வாடகை கொள்வனவு ஒப்பந்தத்தில் ஈடுபடும்போது வாடகை கொள்வனவு ஒப்பந்தம் தொடர்பான கட்டணத்தினை செலுத்த பொருத்தமான முறையினை தெரிவு செய்யலாம்.
- ஒப்பந்தத்தில் தனது நலன்களை ஒதுக்கீடு செய்வதற்கான உரிமை
- உரிமையாளர் பொருட்களின் உடமையை மீண்டும் தனதாக்கி விற்பனை செய்யும்பொழுது எஞ்சியிருக்கும் மேலதிக பணத்தினை மீட்பதற்கான உரிமையுண்டு.

- **ஸ்ரீ லக் என்டபிரைசஸ்** குறித்த வாகனத்தினை மீளப் பெற்றுக்கொண்ட பின்னர் அந்த வாகனத்தினை வேறொரு தரப்பினருக்கு விற்பனை செய்யுமாயின் **ஸ்ரீ லக் என்டபிரைசஸ்** செலுத்தவேண்டிய தொகையை கழித்த பின்னர் மீதமுள்ள தொகையினை பெற்றுக்கொள்ள நிமாலுக்கு உரிமையுண்டு.

*(05 புள்ளிகள்)*

**(ஆ)** செலுத்தவேண்டிய தொகையை செலுத்த தவறுகின்றபோது அல்லது வாடகை கொள்வனவாளரினால் ஒப்பந்தம் மீறப்படுகின்றபோது வாடகை கொள்வனவு ஒப்பந்தத்தின் உரிமையாளர் ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதற்கான உரிமையுண்டு. உரிமையாளர் தவணை தொகைகளை தக்கவைத்துக்கொண்டு வாடகையாளரின் முற்பணத்தினை வைப்பு செய்தபின்னர் பொருட்களின் உடமையை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஏற்பட்டுள்ள இழப்பீடுகளை கோருவதற்கும் அவரின் உரிமை மற்றும் பொறுப்புக்களுக்காக இன்னொருவரை நியமிக்கலாம்.

**நிமால்** உரிய நேரத்தில் பணத்தினை செலுத்த தவறியமையினால் **ஸ்ரீ லக் என்டபிரைசஸ்** வாகனத்தின் உரிமையை மீண்டும் பெற்றுக்கொண்டு ஒப்பந்தத்தினை மீறியமையினால் ஏற்பட்ட நஷ்டத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.
வாடகையாளருக்கு பொருட்களின் தகவல்களையும் நகல்களையும் வழங்குவதற்குரிய கடப்பாடு உரிமையாளருக்கு உண்டு. ஆகவே, **ஸ்ரீ லக் என்டபிரைசஸ்** வாடகை கொள்வனவு ஒப்பந்தத்துடன் தொடர்புடைய தகவல்களையும் அதன் பிரதியையும் நிமாலுக்கு வழங்கவேண்டிய கடப்பாடு **ஸ்ரீ லக் என்டபிரைசஸ்** இற்கு உண்டு.

*(05 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 - முகவராண்மை சட்டம் (Law of Agency)***

**(அ)**

- **முகவர் தனது முதல்வர் தொடர்பான அடையாளத்தினை கட்டாயம் வெளிப்படுத்த வேண்டும்.**

முகவர் தனது தனிப்பட்ட பெயரில் ஒப்பந்தத்திற்குள் உள்வாங்கப்படுவாராயின் குறித்த செயற்பாட்டினை சீர்த்திருத்துவதன் ஊடாக முதல்வர் அதனை தடுக்க முடியும்.

*Keighly Maxted* V *Durrant*

குறித்த விலைக்கு தானியங்களை கொள்வனவு செய்வதற்காக முதல்வர் முகவர் ஒருவரை நியமிக்கின்றார். கட்டுபடுத்தப்பட்ட விலையை விட அதிகமான விலை அடிப்படையில் தானகியங்களை கொள்வனவு செய்ததுடன் தான் முகவர் என்பதை வெளிப்படுத்தாமல் முகவர் தனது தனிப்பட்ட பெயரில் ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். இருந்தபோதிலும் குறித்த பரிவர்த்தனையானது முதல்வரினால் திருத்தம் செய்யப்பட்ட போதும் முகவர் தான் முதல்வரின் சார்பாக பரிவர்த்தனையில் ஈடுபடுகின்றமை வெளிப்படுத்தாமையினால் முதல்வரினால் திருத்தப்பட்டு ஒப்புதல் வழங்கியபோதும் அது வலிதற்றதாகவே நீதிமன்றம் கருதுகின்றது.



aat SRI LANKA

- **முகவர் தனது முதல்வர் சார்பில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான தகைமை முதல்வரிற்கு காணப்பட வேண்டும்.**

Kelner V Baxter (1866) LR 2 CP 174

ஹோட்டல் நிறுவனமொன்றை பதிவு செய்வதற்கான பணியில் ஈடுபட்ட விளம்பரதாரர் ஒருவர் கணிசமான குறைந்த விலையில் ஒரு தொகை விஸ்கியினை கடனுக்கு ஹோட்டல் நிறுவனம் சார்பாக கொள்வனவு செய்தார். குறித்த ஹோட்டல் நிறுவனம் அவற்றை திருத்தி குறித்த விஸ்கி தொகையினை உபயோகித்தது. பின்னர் குறித்த ஹோட்டல் நிறுவனம் வங்குரோத்து நிலையினை அடைந்தது. குறித்த விஸ்கியினை விற்பனை செய்த தொகையினை பெற்றுகொள்ளும் நோக்குடன் விற்பனையாளர் விளம்பரதாரருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. ஒரு தொகை விஸ்கியினை கடனுக்கு ஹோட்டல் நிறுவனம் சார்பாக கொள்வனவு செய்யவதற்கான ஒப்பந்தத்தில் விளம்பரதாரர் ஈடுபட்டபோது குறித்த ஹோட்டல் நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான தகைமை இல்லாத காரணத்தினால் ஒப்பந்த திருத்தச் செயற்பாடானது சட்ட ரீதியாக வலுவற்றது என நீதிமன்றம் குறிப்பிட்டது.

இருந்தபோதிலும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் விலக்களிப்பு வாசகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கம்பனி சட்டத்தின் படி, எதிர்கால கம்பனிகள் சார்பில் விளம்பரதாரர் ஒப்பந்தத்திற்குள் உள்வாங்கப்படுதல் வலிதானதொரு ஒப்பந்தமாகும்.

- **வலிதான மற்றம் சட்ட ரீதியான ஒப்பந்தங்களுக்கு மாத்திரமெ சீரத்திருத்த ஏற்புடையதாகும்.**

Brook V Hook (1871) LR 6

இவ்வழக்கில் முகவர் முதல்வரை போல் போலியான கையொப்பம் இட்டு ஒப்பந்தத்தில் ஈடுப்பட்டுள்ளார். மோசடிசெய்தலானது குற்றவியல் குற்றமாகும் என்பதால் குறித்த ஒப்பந்தமானவு வலிதற்றதாகும் (*யடி-வைெழை*) என நீதிமன்றம தீர்த்தது. எனவே குறித்த ஒப்பந்தத்தினை திருத்தம் செய்ய இயலாது.
கடந்தகால ஒப்பந்தங்களினாலும் (சநவசழளிநஉவளைநடல) கடப்பாடுகளுடைய முதல்வரினால் மட்டுமே வலிதானதொரு திருத்தத்தை மேற்கொள்ளலாம். அதாவது ஒப்பந்தம் இடம்பெற்ற திகதிகளுக்கும் ஒப்பந்த கடமைகள் ஏற்படையதாகும்.

- **ஒப்பந்த பொருட்களின் உண்மைத்தன்மையை முதல்வரிற்கு முகவர் கட்டாம் வெளிப்படுத்த வேண்டும்.**

ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மையையும் நிகழ்வுகளையும் முகவர் மறைத்து பின்னர் அவை வெளிப்படுத்தபட்டாலும் முதல்வர குறித்த உடன்படிக்கைக்கு இணக்கம் வழங்கியதாகவே கருதப்படும். எனினும் மறைக்கப்பட்ட காரணித்தினால் முதல்வர் ஆரம்பத்திலிருந்தே தனது பொறுப்புகளிலிருந்து விலக்களிக்கலாம்.

***(06 புள்ளிகள்)***

**(ஆ)**

அவசரகால நிலைமைகளில் முதல்வரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியாமையினால் முகவரினால் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படும்போது முகவர் தேவையின் அடிப்படையில் குறித்த சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியமையினால் முகவரின் செயற்பாடுகளுக்கு முதல்வர் பொறுப்புடையவராவார்.

எனினும் பின்வரும் தேவைப்பாடுகளை முகவர் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

**I. குறித்த சந்தர்ப்பத்தில் மிகவும் அவசராமான காலப்பகுதி காணப்பட்டதுடன் முதல்வரிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியாமை போதல்.**

**II. அவ்வாறு செயற்படுவதற்கு தேவையான வர்த்தக தேவையொன்று ஏற்பட்டமை.**

**III. முதவரிற்கான நல்லெண்ண அடிப்படையில் முகவர் செயற்பட்டிருக்க வேண்டும்.**

**IV. முகவரின் செயற்பாடு நியாயமானதாகவும் விவேகமானதாகவும் காணப்படவேண்டும்.**

**V. முதல்வரினால் குறித்த ஒப்பந்தினை மேற்கொள்வதற்காக ஏற்கனவே சம்மதம் வழங்கப்படாமல் இருக்கவேண்டும்.**

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 05 – பங்குடமைச் சட்டம்* |
|---|

**(அ)**

பங்குடமைச் கட்டளைச் சட்டத்தின் படி, பங்காளர்கள் பங்குடமை வியாபாரமொன்றில் ஈடுபடும்போது அவர்களின் பரிவர்த்தனை தொடர்பில் முழு தகவல்களையும் உண்மையான கணக்குகளையும் வழங்கவேண்டும் என்பதுடன் வெளிப்படைத்தன்மையினை பேணவேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்தில் "ஜெரி" பரிவர்த்தனை தொடர்பில் முழு தகவல்களையும் உண்மையான கணக்குகளையும் வழங்கவேண்டும் கடமையிலிருந்து விலகியுள்ளார்.

- **<u>பங்குடமையை பாதிக்கின்ற முழு தகவல்களையும் உண்மையான கணக்குகளையும் வழங்கவேண்டும்.</u>** பங்குடமைச் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 28 படி, **அனைத்து பங்குதாரர்களும் பங்குடமை வியாபாரத்தில் வெளிப்படை தன்மையினை பேணவேண்டும்**. ஒவ்வொரு பங்காளரும் ஏனைய பங்காளர் அல்லது அவரது சட்ட பிரதிநிதிக்கு பங்குடமை வியாபாரத்தினை பாதிக்கின்ற அனைத்து விடயங்கள் தொடர்பான முழு தகவல்களையும் உண்மையான கணக்குகளையும் வழங்கவேண்டிய கடப்பாட்டினை கொண்டு காணப்படுகின்றனர். ஒரு பங்குதாரர் தகவல்களை மறைப்பதன் ஊடாக முறையற்ற இலாபத்தினை பெறுவாராயின் அது பங்குதாரரின் நம்பிக்கை கடமையை மீறிதாக கருதப்படும்.

**வழக்கு: பென்ட்லி எதிர் கிறவென்** (*Bently* v *Craven)*

இவ்வழக்கில், கிறவென் (பங்குதாரர்) பங்காளர் சார்பாக பொருட்களை கொள்வனவு செய்யும் நோக்குடன் நியமிக்கப்படுகின்றார். அவர் குறித்த தொகை சீனியினை பாரிய விலைக்கழிவுடன் தனது தனிப்பட்ட தேவைக்காக பெற்றுக்கொள்வதுடன் அது தொடர்பான

எத்தகவல்களையும் வெளிப்படுத்தவில்லை. அவர் வாங்கிய சீனியினை சந்தை பெறுமதிக்கு பங்குடமை வியாபாரத்திற்காக வழங்குகிறார். நீதிமன்றமானது, குறித்த பங்காளர் குறித்த பரிவர்த்தனை ஊடாக அவர் தனிப்பட்ட இலாபத்தினை பெற்றுக்கொண்டுள்ளதுடன் பரிவர்த்தனை தொடர்பான போதுமான தகவல்களை ஏனைய பங்குதாரர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. ஆகவே, பங்குடமையானது அவரது தனிப்பட்ட இலாபத்தினை மீட்கலாம் என தீர்த்தது.

குறித்த சந்தர்ப்பத்தில் கிடைக்கபெற்ற விலைக்கழிவினை மறைத்து தற்போதைய சந்தைப்பெறுமதிக்கு துடுப்பு மட்டைகளை பங்குடைமை வியாபாரத்திற்கு விற்பனை செய்தமையின் ஊடாக **அமீர்** முழுமையான தகவல்களையும் கணக்குகளையும் வெளிப்படுத்தவேண்டிய கடமையிலிருந்து விலகியுள்ளார்.

***(04 புள்ளிகள்)***

**(ஆ)** இந்த சந்தர்ப்பத்தில் **அமீர்** தான் கொள்வனவ செய்த விலையை விட 40℅ இற்கு துடுப்பு மட்டைகளை பங்குடைமை வியாபாரத்திற்கு விற்பனை செய்துள்ளார். இரகசிய இலாபமானது பங்குடமை வியாபாரக் கணக்குடன் சேர்க்கப்படவேண்டும் என்பதே பங்குடமை சட்டத்தின் ஊடாக நிறுவப்படுகின்றது. ஆகவே, **அசார்** அமீர் பெற்றுக்கொண்ட இலாபத்தின் அரைவாசிக்கு உரித்துடையவராவார்.

***(04 புள்ளிகள்)***

**(இ)** பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதிமன்றமானது பங்குடமையானது கலைக்கப்பட்டதாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாக கட்டளையிடலாம்

- ஒரு பங்குதாரர் மனநிலை பாதிக்கப்படுதல் / பைத்தியமாகுதல்
- ஒரு பங்குதாரர் பங்குடமை வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான நிரந்தரமாக இயலாமையடைதல்
- ஒரு பங்குதாரர் பங்குடமை ஒப்பந்தத்தில் பாரபட்சமாக நடந்து கொண்டமையினால் குற்றவாளியாக்கப்படுதல்
- ஒரு பங்குதாரர் பங்குடமை ஒப்பந்தத்தினை மீறுதல்
- பங்குடமை வியாபாரமானது வங்குரோத்து நிலையினை அடைதல்
- நீதிமன்றமானது பங்குடைமையை முடிவுறுத்துவது நியாயமானதாக கருதுதுல்.

***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 10 - வணிகச் சூழலுடன் தொடர்பான குற்றங்கள் (Offences related to the business environment)***

**(அ) நுகவ்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் நோக்கங்கள்**

- நுகர்வோருக்கு எதிராக நுகர்வோரின் உயிர் மற்றும் ஆதனத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதிலிருந்து பாதுகாத்தல்.

- முறையற்ற வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து நுகர்வோரை பாதுகாப்பதுடன் நுகர்வோர் நலன் மீது உரிய கவனம் செலுத்துப்படும் என்பதற்கான உத்தரவாதத்தினை வழங்குதல்.
- போட்டி விலைகளின் அடிப்படையில் தேவையான அளவு பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான சூழ்நிலைகளை ஏற்புடையதாக்குதல்
- முறையற்ற வர்த்தக நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடைமுறைகள் மற்றும் வர்த்தகர்களினால் கையாளப்படும் ஏனைய வடிவங்கள் ஊடான தீமைகளுக்கு இழப்பீடுகளை பெற்றுக்கொடுத்தல்.

*(04 புள்ளிகள்)*

**(ஆ)**
கணனி மூலமான குற்றங்களை அடையாளங் காணும் நோக்கிலும் அக்குற்றங்களை விசாரணை செய்யும் நடைமுறைகளை வழங்குதல் மற்றும் அக்குற்றங்களை தடுக்கும் நோக்கிலும் இக்கட்டளைச் சட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது.
இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைப்பவருக்கு இச்சட்டம் ஏற்படையதாகும். கணனி, கணனி முறைமை அல்லது தகவல் பாதிக்கப்படுதல் அல்லது பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகளுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களாகும்.

*(03 புள்ளிகள்)*

**(இ) பின்வரும் செயல்கள் இச்சட்டத்தின் கீழ் குற்றங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன.**

- அங்கீகரிக்கப்படாத அணுகல் மற்றும் கணனிக்குள் அங்கீகரிக்கப்படாத அணுகலை பாதுகாத்தல்
- குற்றம் ஒன்றினை செய்யும் நோக்கில் கணினிக்குள் அங்கீகரிக்கப்படாத அணுகலை மேற்கொள்ளல் மற்றும் குற்றம் ஒன்றினை செய்யும் நோக்கில் கணனிக்குள் அங்கீகரிக்கப்படாத அணுகலை பாதுகாத்தல்
- கணினியில் காணப்படும் தகவல்களை அழித்தல், நீக்குதல் அல்லது சேர்த்தல், சிதைத்தல், நகர்த்துதல் மற்றும் மாற்றுதல்
- ஹேக்கிங் அமைப்புக்களை பயன்படுத்தி அங்கீகரிக்கப்படாத அணுகலை மேற்கொண்டு தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்
- கணினியில் மேற்கொள்ளப்படும் குற்றங்களில் ஈடுபடல், உதவுதல், தூண்டுதல் மற்றும் சதி செய்தல்.

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 08 - காப்பீட்டு சட்டம், வாடகை கொள்முதல் மற்றும் குத்தகை (Law Of Insurance, Hire Purchase and leasing)*

**(அ)** பொருட்களின் உரிமையை மாற்றுவது தொடர்பான விதிகளை குறிப்பிடுவதன் ஊடாக இச்சந்தர்ப்பம் விளக்கப்படுகின்றது. **யசோ** மற்றும் **தர்ஷி** இருவருக்கும் இடையில் இவ்வொப்பந்தமானது நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் அவர்களது எண்ணத்தின் படி குறித்த பொருட்களின் உரிமையை மாற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தல் ஒன்று காணப்படவில்லை. எனவே, பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 இன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள பகுப்பாய்வு செய்வது அவசியமாகும். அப்பிரிவு பொருட்களின் உரிமையை மாற்றுதலடன் தொடர்புடைய பிரிவாகும்.

இங்கு குறித்த தொகையான சக்கரையின் இருப்பானது உறுசெய்யப்பட்ட வகையை சேர்ந்ததா? அல்லது உறுதிசெய்யப்படாத வகையை சேர்ந்ததா? அடையாளம் காண்பது முக்கியமானதாகும். **யசோ** இன் பொருள் இருப்பு அறையில் (கிடங்கில்) **தர்ஷி** கொள்வனவு செய்த சக்கரைக்கு மேலதியமாக தொகை சக்கரையும் காணப்பட்டது. அத்துடன் **தர்ஷி** கொள்வனவு செய்த சக்கரை பிரிக்கப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஆகவே, சக்கரை இருப்பு உறுதிசெய்யப்பட்ட பொருட்களாகக் கருதப்படலாம்.

பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 இன் 05வது விதியின் படி, உறுசெய்யப்படாத மற்றும் எதிர்கால பொருட்கள் தொடர்பில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் இடத்து மற்றைய தரப்பின் வெளிப்படையான அல்லது உட்கிடையான இணக்கத்தின் ஊடாக ஒரு தரப்பினரால் நிபந்தனைகளின்றி சரக்குகள் கைமாற்றப்படும் வரை அதன் உரிமையும் மாற்றப்படாது.

உதாரணமாக பின்வரும் வழக்குகளைக் குறிப்பிடலாம்.
Pignataro v Gilroy, Healy v Howlett & sons & East Port Navigation Corporation Case.

Pignataro v Gilroy வழக்கு நிகழ்வுகளின் படி, Pignataro 140 பொதி அரிசியினை கொள்வனவு செய்யும் நோக்கில் Gilroy இற்கு பெப்ரவரி 27 ஆம் திகதி காசோலை ஒன்றினை அனுப்புகின்றார். அத்தடன் பொருட்களை அனுப்புவதற்கான கட்டளை இரசீதும் வழங்கப்பட்டது. எனினும் பொருட்கள் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் கட்டளை் இடப்பட்ட 125 பொதிகளில் 15 பொதிகள் Gilroy இன் இருப்பிலேயே அகற்றப்பட்டன. Pignataro மார்ச் 25 ஆம் திகதி வரை குறித்த பொருட்களை வெளியே எடுத்து பார்க்கவில்லை. குறித்த தினத்தில் Gilroy இன் கவனயீனம் ஏதுமின்றி பொதிகள் திருடப்படுகின்றன. Pignataro Gilroy இற்க எதிராக வழக்கு தொடர்ந்த போது நீதிமன்றமானது குறித்த 15 பொதிகள் நிபந்தனைகளின்றி அகற்றப்பட்டதுடன் பொருட்கள் ஏற்கனவே Pignataro இற்கு வழங்கப்பட்டுள்ளமையினால் Gilroy இற்கு எதிராக வழக்கெழு காரணி தோன்றவில்லை எனக் குறிப்பிட்டது.

இதன் அடிப்படையில் **தர்ஷி** அனால் கொள்வனவு செய்யப்பட்ட சக்கரை பிரிக்கப்பட்டு இருந்தமைக்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை. அத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட சக்கரையின் உரிமையானது **தர்ஷி** இற்கு மாற்றப்படவும் இல்லை. மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்துடன் ஒப்பிடும்போது **யசோ** தனக்கு ஏற்பட்ட இழப்புக்களை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும். **தர்ஷி** தான் செலுத்திய பணத்தினை மீண்டும் செலுத்தமாறு கோருவதுடன் பருப்பு இருப்பினை ஏற்க மறுக்கலாம். எனவே, **யசோ** பணத்தினை மோகனுக்கு திருப்பி செலுத்தவேண்டிய கடப்பாடு தோன்றுகின்றது.

***(06 புள்ளிகள்)***

**(ஆ)**

முதற் கொள்வனவாளரை விட பொருட்களின் நல்லெண்ண உரிமையைப் பெறும் இரண்டாம் கொள்வனவாளரரினால் பின்வரும் சந்தர்ப்பங்களில் செலுத்தப்படாத விற்பனையாளரின் பொருட்களை மீள் விற்பனை செய்யலாம்.

i. இயற்கையான பொருட்கள் அழியும் தருவாயில் காணப்படுதல் (உதாரணமாக மரக்கறி வகைகள், மீன் வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள்)

ii. பொருட்களை மீள் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் பொருட்கள் விற்கப்பட்டிருத்தல்.

iii. விற்பனையாளர் குறித்த பொருட்களை மீள் விற்பனை செய்யும் நோக்குடன் வாங்குபவருக்கு வழங்குவதாக அறிவித்தல் வழங்கியும் வாங்குபவர் நியாயமான நேரத்தில் பணம் செலுத்த தவறியமை.

அத்தகைய மறுவிற்பனையின்போது முதற் கொள்வனவாளரை விட பொருட்களின் நல்லெண்ண உரிமையைப் பெறும் இரண்டாம் கொள்வனவாளரர் சிறந்த உரிமை மற்றும் தலைப்பினை பெறுகின்றார்.

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

***B பகுதி முடிவு***

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 02 - ஒப்பந்தச் சட்டம் (Contract Law)***

**(அ)**

அஞ்சல் அல்லது தபால் விதி இதனுடன் தொடர்பு பெறும்.

கொடை முனைவாளருக்கு ஏற்புடைமை அதிகார பூர்வமாக தெரியப்படுத்தப்பட்ட பின்னரே ஏற்புடைமை நடைமுறைக்கு வரும் என்பது பொதுவான விதியாகும். ஏற்புடைமை கொடை முனைவாளருக்கு வழங்கப்பட்ட பின்னரே உடன்படிக்கை நிறைவுக்கு வரும்.

எனினும் அஞ்சல் அல்லது தபால் விதி அதற்கு விதிவிலக்கானது.

இரு தரப்பினரும் ஏற்புடைமை தபால் மூலமாக மேற்கொள்ள உட்கிடையாகவோ வெளிப்படையாகவோ உடன்படும்போது கடிதத்தினை தபாலில் இடும்போது ஏற்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும். கடிதம் கிடைக்கப்பெற தாமதிக்கும்போதும் கடிதல் தொலைத்து விடப்படுகின்றபோதும் இவ்விதி பின்பற்றப்படும்.

மேற்குறிப்பிட்ட விதியானது ***Adams* V *Lindsay*** வழக்கு விதியாகக் கருதப்படுகின்றது.

இவ்வழக்கில் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை **Mr. Ginikana** தனது காரினை **Ms. Kalpana** விற்கு விற்பனை செய்வதற்கான கொடை முனைவினை மேற்கொள்கின்றார். அத்துடன் குறித்த தினத்திலேயே **Ms. Kalpana** தனது ஏற்பினையும் தபால் மூலமாக அனுப்பினார். குறித்த கடிதமானது 14 ஆம் திகதி புதன்கிழமை கிடைக்கப்பெறுகின்றது. எனினும் தனது **Mr. Ginikana** காரினை 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை **Mr Wilferd** இற்கு விற்பனை செய்து விடுகின்றார். செப்டெம்பர் 05 ஆம் திகதி தபாலிடப்பட்ட ஏற்பு கடிதத்தின் ஊடாக ஒப்பந்தம் தோன்றியுள்ளதாக நீதிமன்றம் தீர்த்தது.

குறித்த நிகழ்வுகளின் படி **Ms. Kalpana** 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஏற்பு கடிதம் தபாலில் இடப்பட்டுள்ளது. வலிதானதொரு தபால் ஒப்பந்தம் குறித்த தினத்திலேயே **Ms. Kalpana** மற்றும் **Mr. Ginikana** இடையில் உருவாக்கப்பட்டுள்ளது.

அதன்படி, **Mr. Ginikana** காரினை **Mr Wilferd** இற்கு விற்பனை செய்தத் ஊடாக ஒப்பந்த முறிவினை ஏற்படுத்தியுள்ளார். ஒப்பந்த முறிவுக்கான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான உரிமை **Ms. Kalpana** இற்கு காணப்படுகின்றது.

மேலதிக வழக்கு சட்டங்களள்

*Ceylon University* V *Fernando*

*Household Fire Carriage and Accident Insurance Company* V *Grant*

***(05 புள்ளிகள்)***

**(ஆ)** ஒப்பந்த சட்டத்தின் அடிப்படையில் சட்ட உறவொன்றினை உருவாக்கும் நோக்கில் இரு தரப்பினருக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கை ஒப்பந்தமாகக் கருதப்படும். கொடை முனைவு ஒப்பந்தத்தின் அடிப்படை கூறாகும். வலிதானதொரு கொடை முனைவின்றி வலிதானதொரு ஒப்பந்தம் உருவாகாது. ஒப்பந்தத்திற்கான அழைப்பினூடாகவே முனைவு மேற்கொள்ளப்படுகின்றுது. ஒப்பந்த அழைப்பினை ஏற்றுகொள்ளல் வலிதானதொரு ஒப்பந்தத்தினை உருவாக்காது. பரிவர்த்தனைக்கான விருப்பத்தினை வெளிப்படுத்தல் ஒப்பந்த அழைப்பாகும். 'invitation to treat' எனவே, ஒப்பந்த அழைப்பினை ஏற்றுகொள்ளல் வலிதானதொரு ஒப்பந்தத்தினை உருவாக்காது என்பதற்காக பின்வரும் வழக்குகளை உதாரணமாகக் காட்டலாம்.

- An advertisement – விளம்பரம் - (*Harris* V *Nikerson* , *Partridge* v *Crittenden*)
- Auction sales – ஏல விற்பனை- (*Payne* v *Cave*)
- Tenders – விலைமனுக் கோரல் - (*Spencer* v *Harding*)
- Goods display in a shop to sell –விற்பனைக்காக பொருட்கள் காட்சிப்படுத்தப்படல் - (*Fisher* V *Bell* , *Crawly* v *Rex*)
- Prospectus – விடயத்தொகுப்பு-

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் **Mr. Ginikana** நிதிமன்ற கட்டிடத்தொகுதியில் காணப்படும் அறிவிப்பு பலகையில் விளம்பரம் ஒன்றினை காட்சிப்படுத்தினார். குறித்த விளம்பரமானது கார் விற்பனையுடன் தொடர்புடையதுடன் அது ஒப்பந்த அழைப்பாகவே அடையாளப்படுத்தபடுவதுடன் ஒப்பந்த முனைவாக கருதப்படாது. அதன்படி, **Ms. Podi Manike** இன் தபால் அட்டை அடையாளப்படுத்தப்பட்ட கொடை முனைவாகக் கருதப்படும். அவரினால் தபால் அட்டை மூலமாக செய்யப்பட்ட கொடை முனைவை **Mr Ginikana** ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். இருந்தபோதிலும் **Mr. Ginikana** மற்றும் **Ms. Podi Manike** இடையில் வலிதானதொரு ஒப்பந்தம் உருவாகவில்லை.

***(05 புள்ளிகள்)***

**(இ)** அதேவேளை **Mr. Ginikana** தனது காரினை **Mr Wilferd** இற்கு விற்பனை செய்ய ஒப்புதல் வழங்குகிறார். இரு தரப்பினரின் அறிவிக்கு அப்பால் தபால் ஒப்பந்தத்தின் ஊடாக காரின் உரிமையானது **Ms. Kanchana** இற்கு மாற்றப்படுகின்றது. தவறு காரணமாக ஏற்பட்டமையினால் **Mr. Ginikana** மற்றும் **Mr Wilferd** இற்கு இடையிலான உடன்படிக்கை முடிவுறுத்தப்படும்.

ஒப்பந்த வாசகத்தினை தவறாக விளங்கிக்கொள்ளல் அல்லது குறித்த நிகழ்வுகள் உண்மையானதென தவறாகக் கருதி அதன் காரணமாக ஏற்பட்ட பிழை என்பன ஒப்பந்த தவறாகக் கருதப்படும். பொருள் பற்றிய தவறு காரணமாக ஏற்பட்ட கொடை முனைவு

மற்றும் கொடை ஏற்பு இயல்பாகவே உண்மையற்றதாவதுடன் அதன்காரணமாக ஒப்பந்தம் வலிதற்றதாக்கப்படும்.

ஒப்பந்தம் உருவாக்கப்படாதபோதும் இரு தரப்பில் ஏதாவதொரு கட்சிக்காரரினால் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படலாம். இரு தரப்பில் ஏதாவதொரு கட்சிக்காரரினால் எந்தவொரு உரிமையும் கடப்பாடுகளும் ஒப்பந்த அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படலாம்.

எனவே இவ்வொப்பந்த அடிப்படையில் **Wilfried** இற்கு உரிமையும் கடப்பாடும் இல்லை.

*(05 புள்ளிகள்)*

*அத்தியாயம் 07 - தொழில் சட்டம் (Labour Law)*

**(அ)**

1. **கட்டுபாட்டு பரீட்சை (The Control Test)**

தொழில் தருநரின் கட்டுபாடு எந்தளவு தொழிலாளியின் மீது காணப்படுகின்றதோ அதன் அடிப்படையில் அவர் அவர் தொழில் பெறுநரா? சுயாதீன ஒப்பந்தக்காரரா? என்பது தீர்மானிக்கப்படும். குறித்த சேவையினை வழங்கும்போது தொழில் தருநர் தொழில் பெறுநரின் ஒழுக்கம் தொடர்பில் கட்டுபாடுகளை விதிப்பாராயின் அவர் தொழில் பெறுநராகக் கருதப்படுவார். தொழில் ஒழுக்கம் எனப்படுவது, பணியாளர்களது பணி அல்லது வேலையை தொடங்கும் நேரம், விடுமுறை, பணியாளர் செய்யவேண்டிய கடமைகள், இடைவேளை, வேலை அல்லது பணி முடியும் நேரம், பதவி உயர்வு மற்றும் பணியிடை இறக்கம் என்பவற்றைக் குறிக்கும். மேற்குறிப்பிட்ட கட்டுப்பாடுகளின் அடிப்படையில் தொழில் தருனர் மற்றும் தொழில் பெறுனரை வேறுபடுத்தி அடையாளம் காணலாம்.

aat SRI LANKA

2. **உபகரண பரீட்சை / கருவிப் பரீட்சை (The Equipment Test)**

சிலவேளைகளில் கட்டுப்பாடுகள் இல்லாதபோதும் ஒரு நபர் தொழில் பெறுநராக கருதப்படலாம். ஆகவே, அதற்கான பரீட்சை கருவிப்பரீட்சையாகக் கருதப்படும். தனது சேவைக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களின் அடிப்படையில் இப்பரீட்சை மேற்கொள்ளப்படும். அதாவது தொழிலுக்கு தேவையான உபகரணங்களை தொழில் தருநர் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் போது அவர் தொழில் பெறுனராகக் கருதப்படுவார

3. **ஒருங்கிணைப்பு பரீட்சை (The Integration Test)**

ஒரு பணியாளர் குறித்தவொரு வியாபார நடவடிக்கையுடன் தொடர்புபட்டு காணப்படுவதுடன் குறித்த வியாபாரத்திலிருந்து அவரை பிரிக்வோ அல்லது வியாபாரத்தின் ஒரு பகுதியாகவோ கருத முடியாத சந்தர்ப்பத்தில் அவர் பணியாளராகக் கொள்ளப்படுவார். அதாவது குறித்த பணியாளரின் சேவையானது குறித்த வியாபாரத்தின் பகுதியாக அன்றி குறித்த வியாபாரத்தின் பிரதான பணியாகக் காணப்படவேண்டும்.

4. **பொருளாதார யதார்த்த பரீட்சை (The Economic Reality Test )**

இங்கு, ஒப்பந்த கட்டுப்பாடுகளின் இறுதி நன்மையின் மீத கவனம் செலுத்தப்படுகின்றது. இப்பரீட்சையின் ஊடாக குறித்த நபர் அவருக்காக சேவை செய்யும்போதும் இறுதி நன்மை அவரினால் அடையப்படும்போது அவர் சுதந்திர ஒப்பந்தக்காரராக அடையாளப்படுத்தப்படுவார். குறித்த நபரின் சேவையின் நன்மை கம்பனிக்கானதாக காணப்படும்போது குறித்த கம்பனியின் ஊழியராகக் கருதப்படுவார்.

5. **கலப்பு பரீட்சை (Multiple Test/ Mixed Test)**

தற்போது நீதிமன்றங்களானது மேற்குறிப்பிட்ட பரீட்சைகளை வெவ்வேறாக கருதுவதில்லை. சுயாதீன ஒப்பந்தக்காரர் சேவைக்கான ஒப்பந்தத்தினால் ஆளப்படுகின்றதா? பணியாளர் சேவை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆளப்படுகின்றாரா? என்ற கட்டுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு அனைத்து பரீட்சைகளின் அடிப்படையிலம் பார்க்கப்படுகின்றது.

***(05 புள்ளிகள்)***

**(ஆ) சுரக்ஸா** மற்றும் **சுவர் இன்சுரன்ஸ் கோர்பரேசன் லிமிடெட்** இடையிலான உறவின் தன்மையினை ஆராயும்போது சுயாதீன ஒப்பந்தக்காரர் மற்றும் தொழில் தருநரின் வேறுபாடுகளை கண்டறிய கலப்பு பரீட்சை தொடர்பில் கலந்துரையாட வேண்டியது தொழில் சட்டத்தில் அவசியமாகும். சுயாதீன ஒப்பந்தக்காரர் சேவைக்கான ஒப்பந்தத்தினால் கட்டுபடுத்தப்படுகின்றாரா? பணியாளர் சேவை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆளப்படுகின்றாரா? என்ற கட்டுப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அனைத்து பரீட்சைகளின் அடிப்படையிலும் பார்க்கப்படுகின்றது.

இப்பரீட்சையானது **Sri Lanka Insurance Corporation V A.C.R Wijesundara** வழக்கில் உபயோகிக்கப்பட்டது.

இவ்வழக்கில் ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் கோர்பரேஸனில் தொழில் புரிந்த மதிப்பீட்டாளரின் சேவையை இடைநிறுத்தியமை தொடர்பான வழக்காகும். இதன்போது நீதிமன்றம் சுயாதீன ஒப்பந்தக்காரரா? பணியாளரா? என்பதை அடையாளம் காணும் நோக்கில் நிகழ்வை ஆராய்ந்தது. பின்வரும் காரணிகளை ஆராய்ந்து ஒப்பந்த அடிப்படையில் தொழில் புரியும் நபராக குறித்த மதிப்பீட்டாளரை தீர்ப்பளித்தது.

- இரு தரப்பினருக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில், மதிப்பீட்டாளர் ன்சுரன்ஸ் கோர்பரேஸனின் நன்மைக்காக பணியில் அமர்த்தப்பட்டதுடன் அவ்வாறு செயற்பட தவறுகின்றபோது சேவையிலிருந்து நிறுத்துவதற்கான உரிமை ன்சுரன்ஸ் கோர்பரேஸனிற்கு உண்டு.
- மதிப்பீட்டாளர் தனது சேவையை ஒரு துணைப்பொருளாக அன்றி வணிகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகவே வழங்குகிறார்.
- மதிப்பீட்டாளர் ஒவ்வொரு நாளும் மு.ப 9.30 இற்கு தனது உயர் அதிகாரிகளுக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

- இன்சுரன்ஸ் கம்பனி மதிப்பீட்டாளருக்கும் இன்சுரன்ஸ் கம்பனிக்கும் உபகரணங்களை வழங்குவதுடன் மதிப்பீடுகள் தொடர்பான போக்குவரத்து மற்றும் அச்சிடுதல் செலவுகளையும் ஏற்கின்றது.

  மேற்குறிப்பிட்ட காரணியானது குறித்த தீர்ப்புடன் மிகவும் தொடர்புடையது.

  குறித்த ஒப்பந்த அடிப்படையில் **Suraksha** & **Sure Insurance Ltd** இடையில் ஒப்பந்தம் தோன்றியுள்ளது.

  சுரக்ஸா சுவர் இன்சுரன்ஸ் கோர்பரேசன் லிமிடெட் இன் நன்மைக்காக சேவை செய்ய கட்டுபட்டுள்ளார். தவறுகின்றபோது அவரை சேவையிலிருந்து நிறுத்த கம்பனிக்கு அதிகாரம் உள்ளது.

- சுரக்ஸா ஒவ்வொரு நாளும் மு.ப 9.30 இற்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

- சுவர் இன்சுரன்ஸ் கோர்பரேசன் லிமிடெட் தேவையான அனைத்து உபகரணங்களையும் சுரக்ஸாவிற்கு வழங்கியது. மதிப்பீடுகள் தொடர்பான போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளையும் ஏற்கின்றது.

  குறித்த நிகழ்வுகளின் படி, **Suraksha** & **Sure Insurance Ltd** இடையிலான ஒப்பந்தத்தின் படி, சுரக்ஸா சுவர் இன்சுரன்ஸ் கோர்பரேசன் லிமிடெட் **இன் பணியாளராகக் கருதப்படுவார்.**

*(05 புள்ளிகள்)*
*(மொத்தம் 25 புள்ளிகள்)*

***C* பகுதி முடிவு**

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*